களில்கூட சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுகிறார்கள். ஆனால், ஹோமியோபதி கவுன்சிலில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூட இடம் பெறவில்லை. அரசாங்கம் நியமனம் செய்யும் இந்தக் கவுன் சிலில் ஒரு சட்டமன்ற உறுப்பினராவது இடம் பெற அரசு வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறவர்கள் இலாக்காவைச் சேர்ந் தவர்கள். அவர்கள் நிர்வாக வசதிக்காகவும் பொறுப்புக்காகவும் இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களில் ஹோமியோபதி பதிவு செய்தவர்களாக யாராவது இருந்தால் அவர்களை நான் இடம் பெறச் செய்ய முயற்சி செய்வேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஏற்படுத்தப்பட்ட ஹோமியோபதி குழு வின் கடமைகள் என்ன என்ன? எந்த எந்த காரியங்களுக்காக அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர் கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் ஹோமியோபதி மருத்துவ முறையை அரசு ஒரு முறை யான மருத்துவம் என்று ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து, ஹோமியோபதி மருத்துவர்கள் அதற்காக விதிக்கப்பட்ட தகுதி களின்படி பதிவு செய்யப்படுவதற்காகவும், அந்த ஹோமியோபதி கல்வி முறையை ஒழுங்குபடுத்துவதற்காகவும், அவசியமானால் தனி யார் நடத்துகிற கல்வி நிலையங்களை அங்கீகரிப்பதற்காகவும், ஹோமியோபதிக் கல்லூரியை அவசியமானால் நடத்துவதற்காக வும் இந்தக் கவுன்சில் வேறு பல மாநிலங்களில் அமைக்கப்பட்டிருக் கிற முறையைப் பின்பற்றி தமிழகத்திலும் அமைக்கப்பட்டிருக் கிறது.

Drug stores in town areas

*604 *Q.*—DR. H. V. HANDE:
THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have any proposal to open drug shops round the clock in small towns to enable the public to get life saving medicines; and

(*b*) if so, the details thereof?

1973 டிசம்பர் 4]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்வி எழவில்லை.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, குறிப்பாக, சென்னை நகரத்தில் இப்படிப்பட்ட மருந்துக் கடைகள் ஒன்றிரண்டுதான் இருக்கின்றன. பரந்து விரிந்து கிடக்கின்ற சென்னை நகர மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய இவைகளால் முடியவில்லை. ஆகவே, மேலும் ஒன்றிரண்டு மருந்துக் கடைகள் இரவில் எந் நேரமும் திறந்து வைத்திருக்க அரசு ஆவன செய்யுமா? நாங்கள் சென்னை நகரத்திலிருக்கும் பெரிய டாக்டர்களைச் சந்திக்கும்போது அவர்கள் 'ஸ்பென்சரில் மருந்து வாங்குங்கள்' என்று சொல்கிறார்கள். அதையும் அரசு கூர்ந்து கவனிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இரவு நேரத்தில் ஒரு வணிக நிலையத்தைத் திறந்து வைக்கப் பொறுப்பேற்றுக்கொள்வது தனிப்பட்ட வணிகருடைய உரிமையாகும். அவர்கள் அவ்வாறு திறந்து வைக்கவேண்டுமென்று பொதுவாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. அப்படித் திறந்து வைக்கவேண்டுமென்று மத்திய அரசும் முதலில் ஒரு வேண்டுகோள் விடுத்து அப்படித் திறந்துவைப்பவர்களை ஏதாவது ஒருமுறையில் ஊக்கப்படுத்த முடியுமா என்று ஆராயும்படி கேட்டுக்கொண்டது. அப்படி இரவு நேரத்தில் திறந்துவைப்பவர்கள், தாங்கள் இரவு நேரங்களில் விற்கிற விலை அதிக லாபம் தரும்படியாக இருக்க வேண்டுமென்றும், குறைந்த அளவிலேயே இரவு நேரங்களில் மருந்து விற்பதால், அதிக விலை வைத்தால்தான் தங்களுக்குக் கட்டுப்படியாகும் என்றும் தெரிவித்தார்கள். அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அதுபோல், இரவு நேரத்தில் பணியாற்றுகிற அந்த நிலைய ஊழியர்களுக்கு அரசாங்கமே அந்தச் சம்பளத்தை ஈடுகட்டவேண்டுமென்று கேட்டார்கள். அதையும் ஒத்துக்கொள்ள முடியவில்லை. ஆனால், அப்படிப்பட்ட மருந்தகம் நடத்துகிறவர்கள் ஒருவர் மாற்றி ஒருவர் இரவு நேரத்தில் தங்களுடைய நிலையங்களைத் திறந்துவைக்கச் செய்வதற்கு வேறு எந்த வகையில் ஊக்கப்படுத்தலாம் என்று தொடர்ந்து ஆலோசிக்கப்படுகிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது இரவில் மருந்துக் கடைகளைத் திறந்து வைக்க வேண்டுமென்று வணிகர்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று சொன்னார்

கள். அரசாங்கமே சென்னை போன்ற பெரிய நகரங்களில் மருந்துக் கடைகளைத் திறந்து வைத்து எசென்சியல் ட்ரக்ஸ் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மேலும் தனியார் மருந்து நிலையங்களைத் திறந்து வைக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துவதுதான். அதற்கு ஒருமித்த ஆதரவு பெறுவதுதான் நல்லது என்பது என் எண்ணம். சென்னை போன்ற நகரங்களில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் வைக்கப்படுமானால் பரந்த சென்னை நகரத்தில் எல்லா இடங்களிலும் உடனுக்குடன் மருந்து பெற போதுமான உதவியாக அது இருக்காது. ஒவ்வொரு பகுதியிலும் ஒரு கடையாவது திறந்து வைக்க தனியார்களை ஊக்கப்படுத்துவது மூலம் செயற்படுத்த முயற்சிக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது.

திருப்புவனம் ஒன்றியத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்

***605 வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு மக்கள் நல் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், அம்பலத்தாடி அரிசனங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) கிராமக்குடிநீர் வழங்கும் விரைவுச் செயல்முறைத் (Accelerated Programme) திட்டத்தின் கீழ் இதுகாறும் 3,545 திட்டங்கள் 13 தொகுப்புகளாகத் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. 14-வது தொகுப்பு தயாரித்து முடிக்கப் பெறும் நிலையில் உள்ளது. விரைவில் அதுவும் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பெறும். அடுத்த 15-வது தொகுப்பில் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அம்பலத்தாடி கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூ. 44,000-க்கான திட்டமதிப்பீடு ஒன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த மதிப்பீடு ஏற்றுக்கொள்ளப்படுமானால் ஒரு ஆழ்துளைக் கிணறு தோண்டி,